

# ஸ்ரீ சேஷ ஒளி

திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா



ஒளி - 11 காலாண்டிதழ் அக்டோபர் - டிசம்பர் 2017 கதிர் - 4


# கலங்கிய மனதிற்கு ஓர் கலங்கரை விளக்கம்





மனது ஓர் விசித்திரமான கருவி. நிலை நிறுத்த முடியாமல் கடல் அலை போல் ஆடிகொண்டே இருக்கிறது. அதிலே பல வண்ண கலவைகள் கலந்து இருக்கின்றன. எண்ணங்கள் சிதைவுற்று பறந்து விரிந்த இவ்வுலகத்திலே நடக்கும் நிகழ்ச்சிகளை பற்றி சிந்தித்து தேவை உள்ள கவலைகளும் தேவையற்ற கவலைகளும் இருள் சூழ்வது போல் மனதை சூழ்கின்றன. ஆன்மீகமும், நாத்திகமும், சுகமும், துக்கமும், இன்பமும், துன்பமும், இல்லறமும், துறவறமும், புயலும், தென்றலும், அமாவாசையும், பௌர்ணமியும், விண்ணுலகமும், மண்ணுலகமும், இகவாழ்க்கையும், பரவாழ்க்கையும் போன்ற பல சிந்தனைகளில் உழன்று தவித்து குழம்பி பரிதவித்து இழக்க கூடாததை இழந்து கிடைத்ததை பறிகொடுத்து காண கிடைக்காத காட்சியையும் கண்டு மகிழ்ச்சியும் அடைகிறது. துக்கத்தையும் சந்திக்கிறது. முடிவு பெறாத வாழ்க்கை முடிவுறும்போது முற்றும் துறந்த முனிவர்கள் போல் நாம் ஆகிவிடுகிறோமா? அல்லது கானகத்தை தேடி ஓடி போய் கடும் தவம் செய்கிறோமோ? இல்லத்திலே இருந்தாலும் உள்ளம் பறி தவிக்கிறது. அலுவலகத்தில் இருந்தாலும் மனம் அல்லாடுகிறது. அல்லாடி தள்ளாடி தடுமாறி களையிழந்து முகம் உருமாறுகிறது. 'அகத்தின் அழகு முகத்திலே தெரியும்' என்பார்கள். மனது சரியில்லை என்றால், மகிழ்ச்சி இல்லை என்றால் பொலிவை இழந்து வாடி வதங்கிய நிலையை நாம் அடைகிறோம். சாப்பிட பிடிக்கவில்லை, வெளியில் போக மனது இடம் கொடுக்கவில்லை. புத்தாடையில் நாட்டம் இல்லை. இல்லறத்தில் சுகம் இல்லை. எதுவுமே கசப்புணர்வோடு தோன்றுகிறது. இது போன்ற நிலை அந்த மனதிற்கு ஏன் ஏற்பட்டது? யார் காரணம்? தாயா? தந்தையா? கணவனா? மனைவியா? குழந்தைகளா? மாமியாரா? மாமனாரா? நாத்தனாரா? மைத்துனரா? நண்பர்களா? அதிகாரிகளா? தெரியவில்லை. ஆனால் சிதைந்த போன மனத்திற்குத் தான் அது தெரியும்.

வலைதளங்களில் (Internet) மனதை பறிக்கொடுத்து அதோடு வலைப்போல் பின்னி கொண்டு நூல் கண்டு சிக்கியது போல் இடியாப்ப சிக்கல் ஏற்பட்டு வெளியில் வரமுடியாமல் திண்டாடும் மனது திசை மாறி தடம் மாறி அதிலுள்ள விளையாட்டு தவறாக வழிக்காட்டுவதால் (Blue whale game) உயிரையே இழக்க நேரிடுகிறது. குழந்தைகளே இதற்காக தான் பெற்றோர்கள் உங்களை ஈன்று எடுத்தார்களா? கல்வியில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று பறக்கும் அவர்களது எண்ண கனவுகளை கானல் நீர் ஆக்கி விடாதீர்கள்.

''கழுதைக்கு தெரியுமோ கற்பூர வாசனை'' என்பது போல தகாத நட்பை ஏற்படுத்தி தடுமாற்றம் அடையாதீர்கள்.

புயல் என்று ஒன்று இருந்தால்தான் அமைதியும் உண்டு. வெயில் என்று ஒன்று இருந்தால் நிழலும் உண்டு. இருள் ஒன்று இருந்தால் ஒளியும் உண்டு. மரம் என்று ஒன்று இருந்தால் பழங்கள் உண்டு. குறிக்கோள் ஒன்று இருந்தால் சாதனை உண்டு. கடுமையான உழைப்பு இருந்தால் உயர்ந்த பதவி உண்டு. எண்ணத்தில் நல்ல எண்ணங்கள் இருந்தால் உள்ளத்தில் உவகை உண்டு. இப்படிப்பட்ட ஆக்கலும், அழித்தலும், காத்தலும், கருணை புரிதலும், ஆத்திரபடுதலும், அடக்கமாக இருத்தலும், கோபத்தையும், சந்தோஷத்தையும் கொடுக்க கூடிய இந்த மனதை ஒருமுகமாக ஒரு நிலை படுத்த வேண்டாமா? மண்ணில் தெரியும் வானத்தை விண்ணுக்கு செல்லாமலே தொட வேண்டாமா? சாதிக்க முடியாத விஷயத்தை சாதிக்க வேண்டுமென்றால், காண கிடைக்காத காட்சிகளை காண வேண்டுமென்றால், மனதில் வைராக்கியம் வேண்டும். தன்னம்பிக்கை வேண்டும். ஆன்மீக சிந்தனை வேண்டும். உன்னை நீ உணர்தல் வேண்டும். இவையெல்லாம் சர்வ சாதாரணமாக நிகழ்ந்து விடுமா? தரிசு நிலம் போல் இருக்கும் மனதை பண்படுத்தி பக்குவபடுத்தி பயிற்சி கொடுத்து பங்கம் ஏற்படாமல் விளைநிலமாக மாற்ற வேண்டுமென்றால் வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. சரியான பயிற்சியாளர் தேவைப்படுகிறது. சரியான குருமார்களின் வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. மாயஜால வித்தைகளை காட்டாமல் போலிகளிலும் சுழன்று விழாமல் உண்மை நிலையை உயர்த்தி உன்னை யார் என்று புரிய வைக்க உண்மையான சத்குரு தேவைப்படுகிறார். தன்னை உணர்ந்த தலைவனை அறிந்த தன்னலமற்ற தியாக உள்ளம் கொண்ட ஒரு சற்குருவை நாம் அடைய வேண்டும், தேட வேண்டும், ஓடி ஓடி தேட வேண்டும். உடல் பொருள் ஆவியை அந்த மாபெரும் சத்குருவிடம் நாம் ஒப்படைத்தோம் என்றால் அந்த மாபெரும் சக்தியால் ஈர்க்க பெற்று, உணர வேண்டியதை உணர்ந்து கலங்கிய நிலையில் இருந்து தெளிவு பெற்று துக்கத்தில் இருந்து விடுபெற்று எல்லையில்லா மகிழ்ச்சியை அடைந்து அதன் உச்சக்கட்டமான பேரின்ப நிலையை அடைகிறோம்.

இந்த பாதையில் பயணம் செய்தால் தெளிவான நிலை கிடைத்து கரை எங்கே என்று தெரியாமல் பரிதவிக்கும் கப்பலுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கு போல் காலத்தால் அழியாத அழிக்கமுடியாத மரணத்தை வென்ற மாபெரும் மகான்களான 18 சித்தர்களும், மகான் ஸ்ரீ சத்குரு சேஷாத்ரி ஸ்வாமிகளும் அம்பிகையோடு மாடம்பாக்கம் சக்தி பீடத்தில் கலங்கரை விளக்கமாக விளங்கி கொண்டு வரவேற்று வாழ்த்தி வழிகாட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

வணங்குவோம்! வழிபடுவோம்! வாழ்த்துகளை பெறுவோம்!

குருஜி சர்மா


ஸ்ரீ சேஷஒளியில் சந்தாதாரராகி ஸத்குருவின் திருவருள் பெறுங்கள்

சந்தா ரூ. 101/-

# சூட்சும குருவும் ஸ்தூல குருவும்

*கருணாசாகரம் சாந்தம் அருணாசலவாசினம்*
*ஸ்ரீசேஷாத்ரி குரும்வந்தே பிரம்மேபூதம் தபோநிதம்*

பெருமதிப்பிற்குரிய சேஷபக்தர்களே! வணக்கம். நமது வாழ்க்கை சிறப்புற்று மேம்பட ''சூட்சும குரு'' மிக மிக முக்கியம். அப்படிப்பட்ட சூட்சும குருவை நமக்கு ஒரு ஸ்தூல குருவால்தான் சரியான முறையில், தெளிவான பாதையில் காட்ட முடியும். அப்படி ஒரு சரியான ஸ்தூல குருவும், சூட்சும குருவும் ஒருவர் வாழ்வில் கிடைத்துவிட்டால், எவ்வளவுபெரிய பிரச்சனைகள் ஏற்பட்டாலும் அவை சுலபமாகத் தீரும்.

இருள் சூழ்ந்தால் ஒளி கிடைக்கும்!
மருள் சூழ்ந்தால் அருள் கிடைக்கும்!

நாம் நமது வாழ்க்கைப் பாதையில் செம்மையாக பயணிக்க முடியும்.

தூரம் அதிகமிருந்தாலும் பயணத்தில் பயமிருக்காது.

பாரம் அதிகமிருந்தாலும் தோளில் தொய்விருக்காது.

எல்லாம் ஒரே சீராக நேராக பயணப் பாதையில் அமையும்.

வாழ்க்கைப் பயணம் ஒவ்வொரு வருக்கு ஒவ்வொரு மாதிரி

சிலருக்கு மேடுபள்ளங்கள்
சிலருக்கு வழுக்குப் பாறைகள்
சிலருக்கு சீரான பாதை
சிலருக்கு முரணான பாதை

இந்தப் பாதைகள் பதமானதாகவும் பயணம் சுகமானதாகவும் அமைய நமக்கு ஸ்தூல குருவும், சூட்சும குருவும் அவசியம். உங்களுக்கு உரிய ஸ்தூல குருவை நீங்கள் சரியாக தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படித் தேர்ந்தெடுத்தால் உன்னதமான ''சூட்சும குரு'' உங்கள் வாழ்க்கையை ஒளிமயமாக மாற்றி அமைக்கும் அந்த ''சுந்தர குரு'' உங்களுக்கு எளிதில் கிடைத்து விடுவார்.

ஸ்தூலகுரு சொல்லிக் கொடுப்பார்!
சூட்சுமகுரு அள்ளிக் கொடுப்பார்!
ஸ்தூலகுரு கற்றதைக் கொடுப்பார்!
சூட்சுமகுரு கற்றுக் கொடுப்பார்!
ஸ்தூலகுரு வழியைக் காட்டுவார்!
சூட்சுமகுரு வாழ்வைக் காட்டுவார்!
ஸ்தூலகுரு எடுத்து உரைப்பார்!
சூட்சுமகுரு கொடுத்து அணைப்பார்!

திருவருள் காண குரு அருள் முக்கியம் என்பதுபோல் சூட்சும குருவைக் காண ஸ்தூல குரு மிகமிக முக்கியம்.

சேஷபக்தர்களே! நமது பதினென் சித்தர் சக்தி பீடம் வாருங்கள்

ஸ்தூல குருவாக உள்ள, குருஜி சர்மா அவர்களைக் காணுங்கள். அவர் மூலமாக ''சூட்சும குரு'' சேஷாத்ரி ஸ்வாமிகளின் பரிபூரண அருளைப் பெறுங்கள். ஆயிரம் சித்தர்களுக்கு சமமான உலக மகா சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் திருவடிகளைப் பணியுங்கள்! அவரிடம்...

கேளுங்கள்! கேட்டது கிடைக்கும்!
நாடுங்கள்! நல்லது நடக்கும்!
பாடுங்கள்! பாதை பிறக்கும் !
பணியுங்கள்! கதவு திறக்கும்!

பக்தர்களே! பணிவோடு கேட்கிறேன் வாருங்கள்!

சித்தர்பீட பணிகள் சிறக்க அள்ளித் தாருங்கள்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கிறேன்

பணிவுடன்
**திரு. மருதபரணி**

## குருஜி அவர்கள் புத்தகம் வெளியிடும் காட்சி

திரு. J.K. சிவன் அவர்கள் ஆன்மீக நாட்டம் கொண்டவர் ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம் சேவா சொசைட்டி என்ற தர்ம கார்ய ஸ்தாபனம் ஒன்றை நங்கநல்லூரில் நிறுவி அதன்மூலம் நிறைய புத்தகங்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார்.



தற்சமயம் ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகளின் வாழ்க்கையையும் அவர் மூலம் எண்ணற்ற பக்தர்கள் பெற்ற பலன்களையும் **''ஓர் அற்புத ஞானி''** என்ற புத்தகமாக எழுதி வெளியிட்டுள்ளார். அப்புத்தகத்தின் வெளியீட்டு விழாவிற்கு குருஜி திரு. சர்மா அவர்களை அழைத்திருந்தார். அவரும் சென்று 20-8-17 அன்று மடிப்பாக்கத்தில் உள்ள Dant Raksa Foundation Hallல் புத்தகத்தை வெளியீட்டு முதல் பிரதியை திரு. மருதபரணியும் (அறநிலையத்தின் துணை தலைவர்) 2ம் பிரதியை திரு. ரவிசங்கர் (டிரஸ்டி) அவர்களும் பெற்றுக் கொண்டனர். கிருஷ்ணார்ப்பணம் சேவா சொசைட்டியின் மற்ற முக்கியஸ்தர்கள் பங்கேற்று விழா சிறப்பாக நடந்தது. Dant Raksa Foundation Hall-ன் உரிமையாளர் இடம் கொடுத்து உதவினார்.



## சக்தி பீடத்தில்

### முக்கிய தினங்கள்

**அக்டோபர்**

| | |
|---|---|
| 5 | பௌர்ணமி |
| 18 | தீபாவளி 17ஆம் தேதி இரவு 18ஆம் தேதி காலை |
| 18 | ஹஸ்தம் |
| 19 | அமாவாசை |
| 25 | கந்த ஷஷ்டி |

**நவம்பர்**

| | |
|---|---|
| 3 | பௌர்ணமி |
| 14 | ஹஸ்தம் |
| 18 | அமாவாசை |

**டிசம்பர்**

| | |
|---|---|
| 2,3 | கார்த்திகை தீபம் |
| 3 | பௌர்ணமி |
| 12 | ஹஸ்தம் |
| 17 | அமாவாசை |
| 17 | ஹனுமத் ஜெயந்தி |
| 19 | சனிப்பெயர்ச்சி |
| 29 | வைகுண்ட ஏகாதசி |

18 சித்தர் சக்தி பீடத்திற்கு பஸ் ரூட்
தாம்பரம் வேளச்சேரி வழியாக
ராஜ கீழ்ப்பாக்கம் வந்து தெற்கே
3 கி.மீ. சென்றால் அருள்மிகு தேனுபுரீஸ்வரர்
சிவன் கோயிலுக்கு அருகில்

**ஸ்ரீசக்ர மஹாமேரு**
**ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்**
**18 சித்தர்கள் சக்திபீட**
**பிருந்தாவனம்**
**அமைந்துள்ளது.**

**முகவரி எண். 1, சன்னதி தெரு,**
**மாடம்பாக்கம், சென்னை - 600 126.**
**போன் : 044-22281408, 22280407,**
**29710972, 8754486723**
**பாலாலயம் : 2228 1337**
**பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K**
**தி.நகரிலிருந்து 5A Cut Service**
**குரோம்பேட்டையிலிருந்து S3, S10 மினி பஸ்**
**இறங்குமிடம் : சிவன் கோயில்**

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

**அன்பார்ந்த**
**சேஷ ஒளி வாசகர்களே**




மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரமாகும், சேஷ ஒளியைப் படித்து விட்டீர்களா? உங்களுடைய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். குறை இருந்தால் திருத்திக் கொள்வோம். நிறை இருந்தால் மகிழ்ச்சி அடைவோம். ஸத்குருவின் அருளை அனுபவித்த அன்பர்கள், தங்களுடைய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் பலரும் அறியும் வண்ணம், சேஷ ஒளியிலும் வெளியிடுவோம். தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன், அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி :
பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி : 04424938734, 24953793, 9445232505

# ராசி பலன்கள்

# அக்டோபர் - டிசம்பர் 2017

## மேஷம்



(அசுவினி, பரணி, கார்த்திகை முதல் பாதம்)

### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டம சனியின் ஆதிக்கம் தெரிகிறது. இருப்பினும் குருப் பெயர்ச்சி சுபபலன்களை தரும் நிலையில் உள்ளது. திருமணத் தடை அகலும். காதல் கைக்கூடும். கணவன் மனைவி உறவில் நெருக்கம் அதிகரிக்கும். வீண் மனகவலைகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம். இல்லாததை இருப்பது போல் நினைத்து கொள்ள வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு இல்லத்தில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். பிரயாணத்தின்போது கவனம் தேவை. விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு மனதிற்கினிய சம்பவம் நடக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 21 முதல் 24 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### நவம்பர்

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 6ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் பார்வையில் பலம் கூடியுள்ளது. திருமண தடை அகலும். காதல் கைக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன்-மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பிரயாணத்தின்போது கவனம் தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு மருத்துவ செலவுகள் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத பதவி வந்து சேரும். பணியாளர்களுக்கு பண நடமாட்டம் அதிகரிக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜ காளியம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 18 முதல் 20 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 7ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. காதல் தடை நீங்கும். திருமணம் கைக்கூடும். சில அன்பர்களுக்கு புதுமனை புகுவிழா நடக்கும் பணவரவு திருப்திகரமாக இருக்கும். கணவன் மனைவி உறவில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு மனதிற்கினிய சம்பவங்கள் நடக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு எதிர்பாராத திருப்பம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு பூமியால் லாபம் உண்டு. பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 15 முதல் 17 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## ரிஷபம்



(கார்த்திகை 2, 3, 4, பாதம் ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதம்)

### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபெயர்ச்சி சாதகமாக இல்லாததால் உடல் நலத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவுகள் ஏற்படும். கணவன் மனைவி விட்டுக் கொடுத்து பழகுவது நலம். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரிகள் தொழில் அதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்க வேண்டும். கலைஞர்களுக்கு புதிய தொடர்புகள் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளின் சூழ்ச்சிகள் தெரிகிறது. ஜாக்கிரதை. பணியாளர்கள் நிதானத்தை கடைபிடிக்கவேண்டும். முடிவுகளை தள்ளிப் போட வேண்டும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காக புஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 24 முதல் 26 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### நவம்பர்

ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் நிலை சரியில்லை. பண விஷயத்தில் கவனம் தேவை. வீண் கற்பனைகள் செய்து கொள்ள வேண்டாம் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரிகள் தொழிலதிபர்களுக்கு பணமுடக்கம் ஏற்படும். ஆகையால் கடன் வியாபாரத்தை தவிர்ப்பது நல்லது. கலைஞர்கள் கடல் பிரயாணத்தின் போது கவனமாக இருக்க வேண்டும். மாணவர்கள் கல்வியில் ஓரளவு முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு புதிய வாகன சேர்க்கை ஏற்படும். அரசியல் வாதிகளுக்கு உடல் நலம் பாதிக்கப்படும். கவனம் தேவை. பணியாளர்களுக்கு திடீர் பிரயாணங்கள் ஏற்படும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்கள நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென் மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, ராகு காலம், வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 20 முதல் 22 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### டிசம்பர்

ராசிநாதன் 7ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். சூரியனுடன் சேர்ந்து தோஷமும் ஏற்பட்டுள்ளதால் கணவன் மனைவி விட்டுக் கொடுத்து பழகுவது நலம். உடல் நலத்தில் கவனம் தேவை. மருத்துவ செலவுக்கு இடமுண்டு. எதிலும் எங்கும் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்க வேண்டும். கலைஞர்களுக்கு பொருளாதார பிரச்சனை ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் ஓரளவு முன்னேற்றம் காண்பார்கள். விவசாயி களுக்கு கடன் தொல்லை ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு எதிரி களால் ஆபத்து உண்டு. கவனம் தேவை. பணியாளர்கள் பொருளாதாரத்தை திட்ட மிட்டால் பிரச்சனையை தவிர்க்கலாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாத மாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 17 முதல் 20 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மிதுனம்



(மிருகசீரிஷம் 3, 4 பாதம் திருவாதிரை, பூனர்பூசம் 1, 2, 3 பாதம்)

### அக்டோபர்

ராசிநாதன் உச்சம் அடைந்துள்ளார். குருவும் அனுகூலமாக உள்ளார். எதிலும் வெற்றி எங்கும் வெற்றி என்ற நிலை இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். அயல்நாட்டுப் பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் கொடுக்கும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். விவசாயி களுக்கு திடீர் பொருள் சேர்க்கை ஏற்படும். அரசியல்வாதிகள் இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடக்கும். பணியாளர்களுக்கு எதிர்பாராத பணிஉயர்வு கிடைக்கும். பொது வாக இந்த மாதம் மகிழ்ச்சிகரமான மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், சனிக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 26 முதல் 29 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### நவம்பர்

ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் பலம் கூடியிருக் கிறது. திருமண தடை அகலும். காதல் கைக் கூடும். மற்ற பெண்களால் ஆண்களுக்கும், ஆண்களால் பெண்களுக்கும் தொல்லை ஏற்படும். வியாபாரிகள் தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர் களுக்கு கடல் பிரயாணம் ஆதாயம் கொடுக்கும் மாணவர்களுக்கு அதிக மதிப்பெண்கள் கிடைக்கும். விவசாயிகள் அரசாங்க சலுகைகள் பெறுவார்கள். அரசியல்வாதிகளுக்கு பெண்களால் ஆபத்து உண்டு. பணியாளர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சித்ரகுப்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 22 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 7ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். வாக்கு ஸ்தானத்தில் ராகு பகவான் இருப்பதால் பேச்சில் இனிமை தேவை. படபடப்பை தவிர்க்கவும். காதல் கைக்கூடும். திருமணம் நிறைவேறும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர் களுக்கு பொன் பொருள் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு குழந்தைகளால் ஆதாயம் உண்டு. பணியாளர்களுக்கு பணபுழக்கம் அதிகரிக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 20 முதல் 22 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கடகம்



(பூனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)

### அக்டோபர்

ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ராசியில் ராகு இருப்பதால் வீண் மனகுழப்பங்கள் ஏற்படும். முடிவு எடுப்பதில் அவசரம் காட்ட வேண்டாம். வியாபாரிகள், தொழில் அதிபர்கள் புதிய முதலீடுகள் செய்ய வேண்டாம். கலைஞர் களுக்கு எதிர்பாராத சந்திப்பால் லாபம் உண்டு. மாணவர்கள் தடைப்பட்ட கல்வியை தொடர்வார்கள். விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் கிடைக்கும். அரசியல் வாதிகள் அரசாங்கத்தால் எச்சரிக்கப்படு வார்கள். பணியாளர்களுக்கு சக ஊழியர் களால் தொல்லை உண்டு. பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளி யம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 2 முதல் 4 தேதி வரை, 29 முதல் 31 தேதி வரை, முக்கியமான முடிவுகளை எடுப் பதைத் தவிர்க்கவும்.*

### நவம்பர்

ராசிநாதன் 8ம் இடத்தில் சஞ்சரிக் கிறார். கணவன் மனைவி உறவு வழக்கம் போல் இருக்கும். உணர்ச்சி வசப்பட்டு முடிவுகள் எடுக்க வேண்டாம். திருமணத்துக்கு அனுகூலமான செய்திகள் கிடைக்கும். வியாபாரிகள் தொழிலதிபர்கள் நிதானத்துடன் செயல்படுவது நல்லது. கலைஞர்களுக்கு புதிய திருப்பம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்குப் பூச்சி தொல்லையால் பாதிப்பு ஏற்படும். அரசியல் வாதிகள் பேச்சில் கவனத்துடன் இருக்க வேண்டும். பணியாளர்கள் வழக்கம் போல் பணிகளை மேற்கொண்டால் போதுமானது. பொதுவாக இந்த மாதம் சாதாரண மாத மாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சித்ரகுப்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 27 தேதி வரை முக்கியமான முடிவு களை எடுப்பதைத் தவிர்க்கவும்.*


### டிசம்பர்

ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் அமைப்பு திருப்திகரமாக இருக்கிறது. நீண்டநாள் தடைப்பட்ட விஷயங்கள் அனுகூலமாக மாறும். திருமண தடை நீங்கும். வேலை கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர் களுக்கு புதிய தொடர்பால் நன்மைகள் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகள் கடன் வாங்குவதை தவிர்க்க வேண்டும். அரசியல்வாதிகள் பிரயாணத்தின்போது கவனமாக இருக்கவும். சக ஊழியர்களால் பணியாளர்களுக்கு தொல்லை உண்டு.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : சித்ரகுப்தர், கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 22 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**குருஜி கே.வி.எல்.என். சர்மா**

# சிம்மம்



(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)

**அக்டோபர்**

ராசிநாதன் 2ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். கணவன் மனைவி விட்டுக் கொடுத்து பழகுவது நலம். காதல் விவகாரத்தில் அவசரம் காட்ட வேண்டாம். வியாபாரிகள், தொழில் அதிபர்களுக்கு பண முடக்கம் ஏற்படும். கலைஞர்களுக்கு சகோதர சகோதரிகளால் பாதிப்பு உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகள் ஒரு கடனை வாங்கி மறு கடனை அடைப்பார்கள். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத மருத்துவச் செலவுகள் ஏற்படும். பணியாளர்கள் பொருளாதார விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 4 முதல் 6 தேதி வரை, 31 முதல் நவம்பர் 2 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**நவம்பர்**

ராசிநாதன் நீச்சம் அடைந்துள்ளார். குருவின் பார்வை பலம் உதவி செய்யும். திருமண தடை நீங்கும். காதல் கைக்கூடும். இளைய சகோதர சகோதரிகளால் செலவு ஏற்படும். கணவன் மனைவி உறவு வழக்கம் போல் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அவசரப்பட்டு அதிக முதலீடுகள் செய்ய வேண்டாம். கலைஞர்கள் ஆபரணங்களை ஜாக்கிரதையாக பாதுகாத்து கொள்ளவும். மாணவர்கள் கல்வியில் ஓரளவு முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் ஆதாயம் கிடைக்கும். அரசியல்வாதிகள் இரவு நேர பிரயாணங்களை தவிர்ப்பது நல்லது. பணியாளர்கள் புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.


*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : சித்ரகுப்தர், கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிறு. சந்திராஷ்டம தினங்கள் : 27 முதல் 30 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**டிசம்பர்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 4ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 3ல் குருபகவான் இருப்பதால் பொருளாதாரத்தை திட்டமிட்டு கொள்ள வேண்டும். திருமணம் சற்று தள்ளி போகும். கணவன் மனைவி விட்டுக்கொடுத்து பழகுவது நலம். பொருளாதார முடக்கம் ஏற்படுவதால் கவனம் தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்கவும். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் தரும். மாணவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு பூச்சி தொல்லையால் நஷ்டம் ஏற்படும். அரசியல்வாதிகள் புதிய சொத்தில் முதலீடு செய்ய வேண்டாம். பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 27 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

# கன்னி



(உத்திரம் 2, 3, 4 பாதம், ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதம்)

**அக்டோபர்**

ராசிநாதன் உச்சம் அடைந்துள்ளார். குருவும் அனுகூலமாக உள்ளார். திருமணத் தடை நீங்கும். காதல் கைக்கூடும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. கலைஞர்கள் புதிய சந்திப்பின் மூலம் ஆதாயம் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு புதிய நட்பால் ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். பணியாளர்களுக்கு எதிர்பாராத பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 6 முதல் 8 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**நவம்பர்**

ராசிநாதன் 2ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. திருமணத் தடை நீங்கும். காதலில் புத்துணர்ச்சி ஏற்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகள் அவசரப்பட்டு கடன் உதவி செய்ய வேண்டாம். அரசியல்வாதிகளுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். பணியாளர்க்கு திடீர் பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.


*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 2 முதல் 4 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**டிசம்பர்**

ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. காதல்-திருமணம் கைக்கூடும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பணபுழக்கம் சரளமாக இருக்கும். கணவன் - மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு திடீர் சந்திப்பில் ஆதாயம் உண்டு. மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு வாகனம் வாங்கும் யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு திடீர் பணவரவு உண்டு. பணியாளர்களுக்கு மனதிற்கினிய நிகழ்ச்சி நடக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சித்ரகுப்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 27 முதல் 29 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

# துலாம்



(சித்திரை 3, 4 பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3, பாதம்)

**அக்டோபர்**

ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஜென்மத்தில் குரு சஞ்சரிப்பதால் மனதில் குழப்பமும் புழுக்கமும் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் தொழிலை விரிவுபடுத்த வேண்டாம். கலைஞர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டும். விவசாயிகளுக்கு புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத பண நஷ்டம் ஏற்படும். பணியாளர்கள் நிதானத்தை கடைப்பிடித்து முடிவுகளை எடுக்கவேண்டும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 8 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**நவம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் நீச்சம் அடைந்துள்ளார். ஜென்மத்தில் குரு இருக்கிறார். சூரிய பகவானும் நீச்சம் அடைந்துள்ளார். வீண் மனகுழப்பங்களுக்கு இடம் அளிக்க வேண்டாம். கணவன் மனைவி விட்டுகொடுத்து பழகுவது நலம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வீண் கற்பனைகளை தவிர்ப்பது நல்லது. கலைஞர்களுக்கு வெளிநாட்டு நட்பின் மூலம் ஆதாயம் உண்டு. மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். விவசாயிகளுக்கு தீ விபத்தினால் ஆபத்து உண்டு. குழந்தைகளால் அரசியல்வாதிகளுக்கு தொந்தரவுகள் ஏற்படும். பணியாளர்கள் பொறுமையையும் நிதானத்தையும் கடைப்பிடித்தால் வெற்றி அடையலாம். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே இருக்கும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 4 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**டிசம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 2ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஜென்ம குருவால் மனகுழப்பமும் புழுக்கமும் அதிகரிக்கும். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். திருமணத் தடை சிறிது காலம் நீட்டிக்கும். காதல் விஷயத்தில் கலக்கம் கொடுக்கும். கணவன் மனைவி விட்டுகொடுத்து பழகுவது நலம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நிதானத்தை கடைபிடிக்க வேண்டும். கடல் பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் தரும். மாணவர்கள் குறிப்பிட்ட பாடத்தில் மதிப்பெண் குறைவாக பெறுவார்கள். விவசாயிகள் பொருளாதாரத்தை சரியாக கையாள வேண்டும். அரசியல்வாதிகளுக்கு வருமான வரி துறையினரால் தொல்லை உண்டு. பணியாளர்களுக்கு வீட்டில் இருந்தாலும் காட்டில் இருப்பது போல் தோன்றும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 2 முதல் 4 தேதி வரை, 29 முதல் 31 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

# விருச்சிகம்



(விசாகம் 4ம் பாதம், அனுஷம்,கேட்டை )

**அக்டோபர்**

ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் அனுகூலம் தெரிகிறது. இருப்பினும் ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. பிரயாணத்தின்போது கவனம் தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். கலைஞர்களுக்கு புதுமனை புகுவிழா செய்யும் யோகம் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளால் தொல்லை உண்டு. கவனம் தேவை. பணியாளர்களுக்கு பொன் பொருள் வாங்கும் யோகம் உண்டு. பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கி ழமை. சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் 12 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**நவம்பர்**

ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். சுபவிரைய ஸ்தானத்தில் குரு பகவான் இருப்பதால் சுபநிகழ்வுகள் இல்லத்தில் நடக்கும். திருமண தடை நீங்கும். காதல் நிறைவேறும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு எதிர்பாராத சொத்து சேர்க்கை ஏற்படும். கடல் பிரயாணத்தால் கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். ஆராய்ச்சியில் மாணவர்கள் அதிக லாபம் அடைவார்கள். ஆராய்ச்சியில் மாணவர்கள் அதிக லாபம் அடைவார்கள். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு திருமணத்தை நடத்தி வைக்கும் வாய்ப்பு கிடைக்கும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : குருவாரயூப்பன், புதன்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**டிசம்பர்**

ராசிநாதன் விரைய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். சுபவிரைய ஸ்தானத்தில் இருப்பதால் வீடு, நிலம் வாங்கும் யோகம் உண்டு. நீண்ட நாள் தடைப்பட்ட காரியம் நிறைவேறும். தந்தை வழி சொத்துக்களால் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். திருமணம் நடக்கும். குழந்தை கிடைக்கும். கணவன், மனைவி உறவில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். கலைஞர்களுக்கு புதிய தொடர்பின் மூலம் லாபம் கிடைக்கும். மாணவர்களுக்கு அயல்நாடு செல்லும் யோகம் உண்டு. விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு மிரட்டல்கள் வரும், அஞ்ச வேண்டாம். பணியாளர்களுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : மகாமேரு, வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 4 முதல் 6 தேதி வரை, 31 முதல் ஜனவரி 2ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )



**அக்டோபர்**

ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருப் பெயர்ச்சி அனுகூலமாக இருக்கிறது. எங்கும் எதிலும் வெற்றி கிடைக்கும். வியாபாரிகள், தொழில் அதிபர்களுக்கு வியாபாரம் பெருகும். அதிக லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு புதிய தொடர்புகள் மூலம் ஆதாயம் கிடைக்கும். மாணவர்களுக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. விவசாயிகளுக்கு புதிய வாகன சேர்க்கை ஏற்படும். அரசியல்வாதிகள் ஆடம்பர செலவுகள் செய்வார்கள். பணியாளர்களுக்கு மகிழ்ச்சிகரமான சூழ்நிலை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : குருவாயூரப்பன், புதன்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 12 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**நவம்பர்**

ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. எதிர்பாராத நல்ல நிகழ்வுகள் இல்லத்தில் நடக்கும். கணவன் மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். தடைக்கற்கள் எல்லாம் படிக்கற்களாக மாறும். காதல் கைக்கூடும். திருமணம் நடக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் பெருத்த லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு குழப்பத்திலிருந்து நிவாரணம் கிடைக்கும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே இருக்கும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 9 முதல் 11 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**டிசம்பர்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எதிலும் வெற்றி எங்கும் வெற்றி உருவாகும். திருமணத் தடை நீங்கும். காதல் கைக்கூடும். புத்திர பாக்கியம் கிடைக்கும். கணவன் மனைவி உறவில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் பெருத்த லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு ஆபரணம் வாங்கும் யோகம் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு வங்கி உதவி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். பணியாளர்களுக்கு திடீர் பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 6 முதல் 8 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மகரம்



(உத்திராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)

**அக்டோபர்**

ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். இருப்பினும் 10ம் இடத்தில் குரு வந்திருப்பதால் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியது நல்லது. தன ஸ்தானத்தையும் குடும்ப ஸ்தானத்தையும் குரு பார்ப்பதால் குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடல் வாணிபத்தின் மூலம் லாபம் அடைவார்கள். வெளிநாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் கொடுக்கும். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டும். விவசாயிகளுக்கு திடீர் பணவரவு ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு இடமாற்றம் ஏற்படும். பணியாளர்கள் நீங்களாகவே வேலையை விட கூடாது. எச்சரிக்கை. பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே இருக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சித்ரகுப்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 16* தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**நவம்பர்**

ராசிநாதன் விரைய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனியின் பாதிப்பு தெரிகிறது. 10ம் இடத்தில் குரு இருக்கிறார். நிதானத்தை இழக்க கூடாது. பொறுமையை அதிகப்படுத்த வேண்டும். 7ல் ராகு இருப்பதால் கணவன் மனைவி விட்டுக் கொடுத்து பழகுவது நலம். பெண் குழந்தைகளை நினைத்து கவலை கூடும். இருப்பினும் குருபார்வை தோஷங்களை நீக்கும். வியாபாரிகள் தொழிலதிபர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். கலைஞர்கள் இருப்பை பாதுகாத்து கொள்வது நல்லது. மாணவர்களுக்கு திடீர் நல்ல செய்திகள் வரும். விவசாயிகளுக்கு கடன் உதவி கிடைக்கும். அரசாங்கத்தால் அரசியல்வாதிகளுக்கு குழப்பம் ஏற்படும். பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 11 முதல் 13 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**டிசம்பர்**

ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். செவ்வாயும் அங்கே இருப்பதால் நிர்வாக திறமை பளிச்சிடம். குருவின் பார்வை பலத்தால் திருமண தடை நீங்கும். காதல் கைக்கூடும். கணவன் மனைவியிடையே நெருக்கம் அதிகரிக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் புதிய முயற்சிகள் ஈடுபட வேண்டாம். கலைஞர்களுக்கு அன்னியதேச தொடர்பால் புத்துணர்ச்சி ஏற்படும். மாணவர்கள் ஓரளவு முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகள் அரசாங்கத்தால் பழி வாங்கப்படுவார்கள். எச்சரிக்கை. பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : குருவாயூரப்பன், புதன்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 8 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கும்பம்



(அவிட்டம் 3,4, பாதம், சதயம் பூரட்டாதி 1,2,3 பாதம்

**அக்டோபர்**

ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபகவான் பார்வை ராசியில் விழுவதால், நினைத்த காரியம் நடக்கும். திருமணம் கைக்கூடும். காதல் நிறைவேறும். கணவன் மனைவி திருப்தி அடைவார்கள். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அரசாங்கத்தால் லாபம் அடைவார்கள். கலைஞர்கள் சகநண்பர்களுடன் எச்சரிக்கையுடன் பழக வேண்டும். மாணவர்களுக்கு கல்லூரி பள்ளிகளில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை ஏற்படும். விவசாயிகள் ஆன்மீக பயணம் மேற்கொள்வார்கள். அரசியல்வாதிகள் அரசாங்கத்தால் கௌரவிக்கப்படுவார்கள். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**நவம்பர்**

ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருப்பெயர்ச்சி அனுகூலமாக உள்ளது. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். காதல் கைக்கூடும். திருமண தடை அகலும். புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு மருத்துவ செலவுக்கு இடம் உண்டு. மாணவர்களுக்கு ஆராய்ச்சிகளில் வெற்றி கிடைக்கும். விவசாயிகளுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. அரசியல்வாதிகளுக்கு மகான்களின் தரிசனம் கிடைக்கும். பணியாளர்களுக்கு எதிர்பாராத பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 13 முதல் 15 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**டிசம்பர்**

ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் பார்வை பலம் பலத்தை கூட்டுகிறது. தடைப்பட்ட விஷயங்கள் அனுகூலமாக மாறும் கணவன் மனைவி ஆன்மீக பயணம் மேற்கொள்வார்கள். மகான்களின் அருள் கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு லாபம் கிடைக்கும். கலைஞர்கள் தொழிலில் முன்னேற்றம் காண்பார்கள். மாணவர்கள் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. விவசாயிகளுக்கு பணபுழக்கம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு இடமாற்றம் ஏற்படும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் 13 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மீனம்

(புரட்டாதி 4ம்பாதம் உத்திரட்டாதி, ரேவதி)



**அக்டோபர்**

ராசிநாதன் 8ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருப்பெயர்ச்சி சாதகமாக இல்லை. எதிலும் எங்கும் கவனம் தேவை. அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பண முடக்கம் ஏற்படும். கவனம் தேவை. கலைஞர்களுக்கு தொழிலில் எதிர்பாராத சரிவு ஏற்படும். வரவேண்டிய பணம் தாமதமாக வரும். மாணவர்கள் கல்வியில் ஓரளவு முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு குழந்தைகளால் ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு பதவியில் சரிவு ஏற்படும். பணியாளர்கள் பொருளாதார விஷயத்தில் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 18 முதல் 21 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**நவம்பர்**

ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். 7ம் இடத்தில் சுக்கிரன் நீச்சம் அடைந்துள்ளார். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும். குடும்ப ஸ்தானத்தில் குருபார்வை இருப்பதால் சமாளித்து விடலாம். சில அன்பர்களுக்கு திருமணத் தடை நீங்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பண முடக்கம் ஏற்படும். எச்சரிக்கை! கலைத் துறையை சேர்ந்த பெண்களுக்கு உடல் உபாதைகள் ஏற்படும். மாணவர்கள் அதிகாரிகளால் கௌரவிக்கப்படுவார்கள். விவசாயிகளுக்கு நிலுவை தொகை வசூலாகும். அரசியல்வாதிகளுக்கு அயல் நாட்டுப் பிரயாணம் உண்டு. பணியாளர்கள் பொருளாதாரத்தை சரியாக கையாள வேண்டும்.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : மகாமேரு, வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 15 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**டிசம்பர்**

ராசிநாதன் 8ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். மறைவிடத்தில் இருப்பதால் குருபலம் குறைகிறது. பொருளாதார நெருக்கடியை சமாளிக்க வேண்டும். கணவன் மனைவி விட்டுக் கொடுத்து பழகுவது நலம். தடைப்பட்ட திருமணம் சற்று தாமதமாக நடைபெறும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்க வேண்டும். கலைஞர்கள் நட்பு வட்டாரத்தில் கவனத்துடன் இருக்க வேண்டும். மாணவர்களுக்கு திடீர் மகிழ்ச்சிகரமான தகவல் வரும். விவசாயிகளுக்கு அரசாங்க உதவி கிடைக்கும். அரசியல்வாதிகள் பேச்சில் நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும். பணியாளர்கள் இடமாற்றத்திற்கு முயற்சி செய்ய வேண்டாம். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 13 முதல் 15 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**SRI SESHADRI SWAMIGAL TRUST - MUMBAI OFFICE ADDRESS**

**A-11, Room No. 8, Ground Floor,
Shahid Bhagat Singh, CHS Ltd.,
Bindra Complex, Mahakali Caves
Road, Near Holi Spirit Hospital,
Andheri, Mumbai - 93.
Ph : 28387116**

# வியக்க வைத்த மகான்கள்

திருவண்ணாமலையில் சேஷாத்ரி சுவாமிகளுக்கு அனேக பக்தர்கள் உண்டு. அவர்களுள் ஒருவர் பெருமாள் சுவாமி அவர் சுவாமிகளிடம் மிகுந்த பக்தியும் அன்பும் வைத்திருந்தார். ஒரு நாள் முலைப்பால் தீர்த்தத்தில் நீராடிவிட்டு கரையேறியபோது மகானை கோயில் அருகே பார்த்துவிட்டார். ஓடோடிச் சென்று வணங்கிவிட்டு சுவாமிகளே என்னோடு வாருங்கள். நாம் ஏதாவது சிறிது உணவு உண்டு நம் பசியைத் தீர்த்துக் கொள்வோம் என்று அழைத்தார். உடனே சேஷாத்ரி சுவாமிகள் என்ன? பெருமாள் சுவாமி நீ உணவு வாங்கித் தருகிறாயா? உன்னிடம் பணம் இருக்கிறதா? எனச் சிரித்துக் கொண்டே வினவினார். பெருமாள் சுவாமியும் இருக்கிறது சுவாமி என்று சொல்லிக் கொண்டே இடுப்பைத் தடவினார். சுருக்குபை எங்கே? காணவில்லை, என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டார். முற்றும் உணர்ந்த மகா ஞானி சேஷாத்ரி சுவாமிகள் ‘‘போ, போ முலைப்பால் தீர்த்தத்திற்குப் போ, காசு அங்கே இருக்கு என்று கூறி மறைந்துவிட்டார் ஓடிச்சென்று பார்த்த பெருமாள் சுவாமிக்கு வியப்பு! தான் குளிக்கச் செல்லும் முன் கரையோரமாக வைத்துவிட்டுச் சென்ற ‘‘சுருக்குப்பை’’ அப்படியே அங்கே இருந்தது. தான் மறந்து விட்டு கரையேறிச் சென்றது அப்பொழுதுதான் ஞாபகம் வந்தது! எப்படி அறிந்தார்? பரமசிவனின் அவதாரமான சத்குருநாதர் சேஷாத்ரி சுவாமிகள் வியப்பு! வியப்பு! வியப்பு!

காஞ்சிப் பெரியவர் ஒருமுறை தேனம்பாக்கத்தில் இருந்த பொழுது அவரைக் கண்டு தரிசிக்க ஸ்ரீதர் அவர்களின் தாயார் கமலத்தம்மாள் வந்திருந்தார். அவர் மகா பெரியவா குளித்த இடத்தில் தானும் குளித்து புனிதம் அடைய எண்ணி குளத்தில் குளித்து எழுந்தார். பேரதிர்ச்சி அடைந்தார். அவரது வைரத்தோடு ஒன்று குளத்தில் விழுந்துவிட்டது. எத்தனை தேடியும் கிடைக்கவில்லை. மங்கள சின்னமான காதணியைத் தேடி அதுவும் வைரமன்றோ? கெடு சம்பவம் எதுவும் நிகழாமல் இருக்க வேண்டுமே! கவலையுற்று மாமுனியே! நீயே கதி என்று அனைத்தையும் அவரிடம் கூறி செய்வதறியாது நின்றார். மீண்டும் அவரைச் சென்று தொலைத்த இடத்தில் தேடச் சொன்னார். தேடினார். கிடைக்கவில்லை. மீண்டும் வந்து வருத்தமுற்றவராய் காஞ்சி முனிவரிடம் முறையிட்டார். ‘‘நடமாடும் தெய்வம்’’ அந்த அம்மையாரை அழைத்துக் கொண்டு தானும் குளத்திற்குச் சென்று தோடு தொலைந்த இடத்தில் மடத்தின் சிப்பந்தி கன்னையா விட்டு கை நிறைய மண்ணை அள்ளச் சொன்னார். மண்ணுடன் வைரத்தோடு வெளிவந்து மின்னியது. அந்த அம்மையாரை குளித்த இடத்தில் தான் யானை ஒன்று குளித்துவிட்டு அப்பொழுது கரையேற சென்றிருந்தது. அந்த இடத்தில் மண்ணோடு மண்ணாய் புதைந்த வைரத்தோடு கிடைத்தது என்றால் ‘‘காமாட்சியின் அவதாரமான ‘‘மகாமகா பெரியவாளின் கண் அசைவால் அன்றோ!

மண்ணில் புதைந்த வைரம் கண்ணில் தென்பட்டாலும், எடுக்க மறந்த சுருக்குப்பையை ஞாபகப் படுத்தியதும் இக்கருணை தெய்வங்களின் தீர்க்க தரிசனத்தினாலன்றோ!

நம்மை ஊழ்வலையில் வீழாமல் காக்கும் ‘‘கலங்கரை விளக்கங்களன்றோ’ இக்கருணா சாகரர்கள்!

- ஜெயந்தி முரளி

## மாடம்பாக்கம் பதினெட்டு சித்தர்களின் கோயிலினுள் சென்று வந்தவர்கள் விடையளிக்கவும் செல்லாதவர்கள் சென்று வந்து விடையளிக்கவும் குறுக்கெழுத்துப் போட்டி






**வினாக்கள்:**

**மேலிருந்து கீழ்**

1. சென்னையில் சேஷாத்ரி சுவாமிகளின் கோயில் எங்குள்ளது? (7)

**வலமிருந்து இடம்**

2. நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருத்துவம் ....ஆகும் (5)
3. மாடம்பாக்கத்தில் சித்தி அடைந்த சித்தர்.....(2)

**இடமிருந்து வலம்**

4. இங்கு பசு.....உள்ளது? (3)
5. இங்கு ஓர் ............அமைக்கப்படவுள்ளது. (6)
6. சக்திபீட கணபதி எழுந்தருளியுள்ள ஆலயம்......(5)
7. இங்கு....மேரு அமைக்கப்பட்டுள்ளது.
8. சேஷாத்ரி சுவாமிகள் வாழ்ந்த ஊர் எது? (7)

விடைகள் 8ம் பக்கம் பார்க்க


## குருஜி பதிலளிக்கிறார்!

| | விடைகள் |
|---|---|
| 1. வீட்டின் முன் வேப்பமரம் வளர்க்கலாமா? | 1. வளர்க்கலாம். |
| 2. அறுபதாம் கல்யாணம் எந்த வயதிலிருந்து எந்த வயதிற்குள் நடத்த வேண்டும்? | 2. 60 வயது முடித்தவுடன் 61 வயது முடிவதற்குள். |
| 3. தேங்காய் உடைக்கும்போது அழுகலாய் இருந்தால் தீவினை நீங்கியது என நினைத்துக் கொள்ளலாமா? | 3. அவரவர் மனோநிலையை பொறுத்தது. |
| 4. நவக்கிரஹங்களை அப்பிரதட்சணம் செய்வது ஏன்? | 4. பிரதட்சணமாக செய்வது நல்லது. |
| 5. கருவறையின் பின்புறச் சுவரை தொட்டு வணங்குவது ஏன்? | 5. கருவறையினுள் செல்ல முடியாத காரணத்தினால் |
| 6. தினமும் வீட்டில் நிகழ்த்தும் பூஜைக்கு இராகு காலம் பார்க்க வேண்டுமா? | 6. வேண்டாம். |
| 7. சனீஸ்வரனுக்கு எள் விளக்கு ஏற்றலாமா? | 7. ஏற்றலாம் (சனிக்கிழமை தோறும்). |
| 8. காக்கைக்கு புழுக்கரிசியில் சமைத்த அன்னத்தை உண்ணப் போடலாமா? | 8. நாம் உண்ணும் உணவை அளிப்பதால் தோஷம் இல்லை. |
| 9. துர்க்கை முன் எலுமிச்சை விளக்கு இராகு காலத்தில் ஏற்றலாமா? | 9. குறிப்பிட்ட காரணத்திற்கு மட்டும். |
| 10. பெண்கள் அங்கப்பிரதட்சணம் செய்யலாமா? | 10. அங்கங்களை வெளிகாட்டாமல் செய்யலாம். |
| 11. காலையில் சூரிய நமஸ்காரம் எத்தனை மணிக்குள் செய்ய வேண்டும்? | 11. சூரிய உதயத்தில் செய்யவேண்டும். |
| 12. ‘குலதெய்வம்’ எது என்று தெரியாதவர்கள் எந்த தெய்வத்தை வணங்க வேண்டும்? | 12. தாய் தந்தையரே தெய்வம். |

# சக்திபீடத்தில் நடந்து முடிந்த விழாக்கள்


பூர்ணாஹுதி செய்யும் காட்சி


தீபாராதனை


குருஜி அவர்கள் நாக பிரதிஷ்டையின் அபிஷேக காட்சி


ஸ்தல விருட்சத்தில் திருமதி ராதா சர்மா அவர்கள் மரம் நடும் காட்சி


குருஜி பிரசாதம் அளிக்கும் காட்சி


விநாயகர் ஊர்வலம்


சுந்தர கணபதியின் அலங்காரம்


குரு பெயர்ச்சி ஹோமம்

## பசு மடம்



பக்தர்கள் அனைவரும் பசுமடத்தை தரிசித்து பசுபராமரிப்புக்கு/தீவனத்திற்கு தாராளமாய் நிதியுதவி அளியுங்கள். பதினென் சித்தர் சக்தி பீடத்திலுள்ள கோமாதாக்களில் ஒன்றை தத்தெடுத்து கோதானம் செய்யலாம்.
விபரங்களுக்கு : 044- 24938734, 24953793
**கோமாதாவை பராமரிக்க நிதிதனை அள்ளித் தாருங்கள்.**

## சமயக்குரவர் அப்பர் சுவாமிகள்

கடலூர் மாவட்டம், திருவாமூரில் வெள்ளாளர் குலத்தில் மருணீக்கியார் எனும் இயற்பெயரோடு, புகழனார் மற்றும் மாதினி இணையாருக்கு மகனாகப் பிறந்தார். சமண நூல்களை கற்று, அம்மதத் தலைவர்களில் ஒருவாராக இருந்தபடியால் ''தருமசேனர்'' என்று அழைக்கப்பட்டார். ஒரு சமயம் திருநாவுக்கரசருக்கு கடுமையான வயிற்றுவலி நேரிட்ட பொழுது, தமக்கையார் திலகவதியாரின் ஆலோசனைப்படி ''கூற்றாயினவாறு விலக்கலீர்'', எனத் துவங்கும் பாடலை பாடினார் அடுத்த கணம் நோய் தீர்ந்தது. அந்த நிமிடம் முதல் சைவ சமயத்தவராகி, ''நாவுக்கரசர்'' என்று போற்றப்பட்டார். பல்வேறு சிவாலயங்கள் சென்று தேவார பதிகங்கள் பாடினார். சிவலாயங்களை தூய்மைப்படுத்தும் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இதனையே சைவர்கள் இன்று ''உழவாரப் பணி'' என்று கொண்டாடுகின்றனர். அதனால் ஆலய தூய்மைபடுத்தும் உழவாரப் பணிக்கு அப்பர் பெருமான் தலைவராகத் துதிக்கப்படுகிறார். இவர் புரிந்த அற்புதங்களை எண்ணிலடங்காதது சமண மன்னன் மகேந்திர பல்லவன் இவரை பலமுறை துன்புறுத்திய பொழுதும் ''கற்றுணைப்பூட்டி கடலினுள் பாய்ச்சினும் நற்றுணை ஆவது நமச்சிவாயமே'' என்று கூறினார். அப்பொழுது கடலில் இவருடன் சேர்த்துக் கட்டப்பட்ட கல் தோணியாக மாறி, பெருமானை கரை சேர்த்தது. சிவபெருமானிடமிருந்தே இவர் படிக்காசு பெற்றுள்ளார். வேதாரணியம் திருக்கோவிலில் இவர் பதிகம் பாட, திருக்கதவு தானாகத் திறக்கப் பெற்றது. காசிக்கு அப்பாலுள்ள ஒரு தடாகத்தினுள்ளே இவர் மூழ்கி, திருவையாற்றின் ஒரு வாவியின் மேலே தோன்றி கரையேறி உள்ளார்.

49000 தேவாரப் பதிகங்களை திருநாவுக்கரசர் பெருமான் பாடியுள்ளார். தனது முதிர்ந்த வயதில் திருஞானசம்பந்தரால் ''அப்பர்'' என்று போற்றப்பட்டு, அவருடன் பல தல யாத்திரைகள் செய்தார். இவரது தேவாரப் பாடல்கள், 4,5,6 ஆகிய மூன்று திருமறைகளில் வகுக்கப்பட்டுள்ளன. தனது 81ஆவது வயதில் திருப்புகலூரில், சித்திரை சதயத்தில், ஈஸ்வரனது திருப்பாதங்களுடன் ஒன்று கலந்தார். இத்தகைய மேன்மை பொருந்திய முதலாம் சமயர் குறவராம் அப்பர் பெருமான், நம் பதினெண் சித்தர் சக்திபீட பிருந்தாவனத்தில், தேஜஸுடன் மற்ற சமய குரவர்களுடன் (திருஞான சம்பந்தர், மாணிக்க வாசகர், சுந்தரமூர்த்தி நாயனார்) அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். அவரை வணங்கினால், உள்ளம் மேன்மை பெற்று, அறிவு தெளிந்து ஆற்றல் பெருகி, வாழ்வு வளம் பெறும் என்பது திண்ணம்!

- உமாபரணி

## நாமும் இப்படி பழகிப் பார்ப்போமா?

1. அதிகாலையில் துயில் எழுவோம்
2. தியானம் செய்வோம்
3. தெய்வத்தை வணங்குவோம்
4. நல்லதே செய்வோம்
5. அன்புடன் பழகுவோம்
6. காக்கைக்கு உணவிடுவோம்
7. நல்லுணவு புசிப்போம்
8. ஈந்துண்டு வாழ்வோம்
9. பெற்றோரை பேணுவோம்
10. பெரியோரை மதிப்போம்
11. இயற்கையை போற்றுவோம்
12. மரங்களை நடுவோம்
13. நடைபயிற்சி செய்வோம்
14. உடல்நலத்தை காப்போம்
15. பொது நலத்தில் ஈடுபடுவோம்

**ஸ்ரீ சேஷ ஒளி**
திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர்
குருஜி கே.வி.எல்.என். சர்மா

வெளியீட்டாளர்
திரு. கே. ராமசுப்ரமணியன்

உதவி ஆசிரியர்
திருமதி. என். ஜானகி

கௌரவ ஆசிரியர்கள்
திரு. மருதபரணி
திருமதி. உமாபரணி

வடிவமைப்பு
திருமதி. பிரேமா

பதிவு அலுவலகம்
ப.எண். 21/3, பு.எண். 43,
அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
போன் : 04424938734, 24953793
இணைய தளம் : www.seshadri.info
Email: guruji@seshadri.info

## ட்ரஸ்டின் வெளியீடுகள்

1. ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவன ஸ்தல வரலாறு (தமிழ், ஆங்கிலம்)
2. மகான் திருவுருவம் பதித்த சிறிய, பெரிய படங்கள்
3. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் பூஜை முறைகள்
4. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மகாத்மியம் (தமிழ், ஆங்கிலம்)
5. The Glory of Sakthi Peetam
6. ஸ்ரீ கிரஹலட்சுமி (வாஸ்து தோஷம் போக்கும் படம்)
7. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் (அபூர்வ படம்)
8. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸத்குரு பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
9. ஸ்ரீ சக்ர மஹாமேரு அம்பிகை பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
10. ஸத்குருவும் சக்தி பீடத்தின் மஹிமையும்

## அறக்கட்டளையின் இதர சமூக நற்பணிகள்

**இலவச மருத்துவமனை செயல்படுகிறது.**

நித்திய அன்னதானம் : சக்தி பீடத்தில் நித்திய அன்னதானம் நடைபெறுகிறது. வடை பாயசத்துடன் அன்னதானம் ரூ. 2500/- நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு 80G உண்டு.

**தானத்தில் சிறந்தது அன்னதானம்**
**அன்னதானம் செய்வோம்**
**ஆனந்தம் அடைவோம்**



**விடைகள்**

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ① | | | | | | |
| | | | | | | மா | | | | | | |
| | | | | ④ | ம | ட | ம் | | | | | |
| ⑤ | ந | ந் | த | வ | ன | ம் | | | | | | |
| | | | | | ⑥ | பா | லா | ல | ய | ம் | | |
| | | ⑦ | ப | ச் | சை | க் | க | ல் | | | | |
| | | | | | ③ | க | ர் | க | போ | | | |
| | | | | | ② | ம் | ச | வ | ல | இ | | |
| | | | | | ⑧ | தி | ரு | வ | ண் | ணா | ம | லை |

1. மாடம்பாக்கம்
2. இலவசம்
3. போகர்
4. மடம்
5. நந்தவனம்
6. பாலாலயம்
7. பச்சைக்கல்
8. திருவண்ணாமலை

**ஸ்ரீ சேஷ ஒளி**
**விளம்பர கட்டண விபரம்**

| | | |
|---|---|---|
| முழு பக்கம் | ரூ. 5,000 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/2 பக்கம் | ரூ. 2,500 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/4 பக்கம் | ரூ. 1,250 | (கறுப்பு/ வெள்ளை) |
| இரு பத்தி | ரூ. 500 | |
| ஒரு பத்தி | ரூ. 250 | |

Publisher Mr. K. RAMASUBRAMANIAM from New No. 43, Alamelumangapuram, Mylapore, Chennai - 600 004
and Printed by him at Icon Graphics, Chennai-5.